விச்வாவஸு ஹு பங்குனி மீ
மார்ச் - ஏப்ரல் 2026

மலர்: 8
இதழ்: 12

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





ஹஸ்தம்





பாலாலயம் - சயனாதிவாஸம்



ஸ்ரீ:
விச்வாவஸு ஞூ பங்குனி மீ
மார்ச் - ஏப்ரல் 2026
மலர்: 8
இதழ்: 12

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai & 87, Cell : 95000 45604
Designed by: yeSKay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஶ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீவைஷ்ணவ தினசரி எனும் ப்ரபந்தத்தில் நான்காவது பாசுரத்தில் உபாதான காலத்தில் மேலும் கூற வேண்டிய விஷயங்களை விவரித்தருளுகிறார்.

‘‘உலகில் இனிய பொருள்கள், தேன் நிறைந்த மலரில் அவதரித்த பிராட்டியினால் ஆநந்தம் அடையும்படி மருவிய திருவுக்கும் திருவாகிய செல்வன் மகிழ்வுறுவதற்காகவே ஏற்பட்டன என்று நினைவுகொண்ட பகவத் பக்தர்கள், அறநெறியைத் தழுவாதவன் எவ்வாறு தம்மை அணுகினாலும் தாம் அவனை நெருங்க மாட்டார்கள்; நேர்மையில்லாத வழி என்று சொல்லப்படும் ஒரு வழியில் ஒருகாலும் செல்ல மாட்டார்கள்’’ என்று அறுதியிட்டுப் பேசுகிறார் ஆசார்யர்.

ஒழுக்கமற்றவர்கள், திருடன், பாவி, போலித்தனம், பேராசை, அகந்தை நிறைந்தவர்கள் ஆகியோரிடமும் மரியாதை இல்லாதவரிடமிருந்தும், தீய நடத்தை உள்ளவரிடமிருந்தும் எவ்வளவு பெரிய நெருக்கடி மற்றும் ஆபத்து காலத்திலும் ஒருபோதும் தாமாகவே முன்வந்து சிறிதளவு செல்வத்தைக் கூட ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று பல்வேறு ஸ்ம்ருதிகள் கூறுகின்றன.

அதேபோல் எவருடைய வீட்டில் கேசவனுக்கான வழிபாடு நடைபெறுவதில்லையோ, அவர் வீட்டில் உள்ள உணவை ஒருபோதும் உண்ணக்கூடாது. ஏனெனில், அந்த உணவு விலக்கப்பட்ட உணவிற்குச் ஸமமானதாகும்.

இதேபோன்று, நாற்சந்தி, சிவாலயம், சுடுகாடு முதலான தூய்மையற்ற அல்லது பூஜைக்குத் தகுதியற்ற இடங்களில் வளர்ந்த பூக்கள் மற்றும் இலைகளை எம்பெருமானின் திருவாராதனத்திற்குப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். தகுதியற்ற இடங்களில் பூத்த மலர்களைத் தவிர்த்து, தூய்மையான நந்தவனத்தில் அல்லது வீட்டில் வளர்க்கப்பட்ட செடிகளில் இருந்து மட்டுமே பூக்களைப் பறிக்க வேண்டும் அதுவே எம்பெருமானைப் பூஜிக்கும் துறை என்கிறார்.

ஆக, சாஸ்த்ரம் கூறிய வழியில் பகவதாராதநத்திற்குரிய வஸ்துக்களைச் சேர்த்தலே உபாதானம் எனப்படும் என்று அருளிச்செய்கிறார் ஸ்வாமி.

பங்குனி மாதத்திற்குப் பல ஏற்றங்கள் உண்டு. பரமனுக்கும், பிராட்டிக்கும் பரிணயம் (திருமணம்) நடந்தது இந்த மாதம் தான். இது எல்லா திவ்யதேசங்களிலும் பிராட்டிக்கும், எம்பிரானுக்கும் நடக்கும் உத்ஸவமாகும். அன்றும் இன்றும் எங்கும் எப்பொழுதும் எல்லோராலும் மனிதகுல நல்வாழ்விற்கு மாபெரும் வழிகாட்டியாக நடந்தும் நடத்தியும் விளங்கிய ராமபிரானின் அவதார மஹோத்ஸவமும் இந்த வருடம் பங்குனியிலேயே நடைபெறுகிறது.

மேலும் நம் திவ்ய தம்பதிகள் மிகவும் உயர்ந்த ரீதியாக இந்த விச்வாவஸு வருட பங்குனி இரண்டாம் தேதியன்று மஹா ஸம்ப்ரோக்ஷணம் கண்டருள்வதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கிறார்கள். இந்த வைபவத்தில் நாம் கலந்துகொண்டு ஸ்ரீநிவாஸ தம்பதிகளையும் ஆழ்வார் மற்றும் ஆசார்ய ஸார்வபௌமரையும் ஸேவித்து தன்யர்களாவோம்.

பல அத்புத கட்டுரைகளுடன் மாதாந்திர ஸம்ப்ரதாய தொடர்களுடனும், மாசி மாதத்தில் நடைபெற்ற உத்ஸவங்களின் படங்களுடன் பங்குனி மாத தேசிக சந்தேசம் உங்கள் கரங்களில்.

# Panguni Peruvizha – Maha Samprokshanam

## FROM THE DESK OF TRUSTEES

By the divine grace, the month of Maasi was filled with spiritual fervour and divine grace at our temple. The Padhuka Sahasra Utsavam was celebrated with great devotion, with the sacred verses of **Sri Padhuka Sahasram** resonating through the temple premises, reminding devotees of the unparalleled devotion of Swami Desikan to the Divine Feet of the Lord.

The **Dhavanotsavam** was conducted in a serene and devotional atmosphere. On this occasion, several eminent musicians offered Carnatic music concerts, filling the temple with divinity. The rendering of the sacred **Ghana Raga Pancharathna Kritis** added a special spiritual charm to the celebrations. The **Maasi-Pournami Festival** was also celebrated with due traditional observances and attracted a large number of devotees who participated in the holy **Samudra Snanam,** along with Perumal.

**Preparations for Maha Samprokshanam**

A significant milestone in the history of our temple during this period was the performance of **Balalayam,** which was conducted with grandeur and strict adherence to Agama traditions. This sacred ritual marked the commencement of the renovation and restoration works leading to the **Maha Samprokshanam,** scheduled to take place on 16th March 2026.

The **Ankurarpanam** ceremony commenced on 12th March 2026, marking the beginning of the sacred rituals associated with the Samprokshanam. This will be followed by three days of Homams and Vedic rituals, culminating in the Maha Samprokshanam on the 16th.

For this sacred occasion, our temple **Archakas,** along with those from various Divyadesams, are participating in the rituals. Every day, both in the morning and evening, there has been Veda Parayanam and Divya Prabandham recital by more than 150 Vedic and Prabandha scholars, creating an atmosphere filled with divine vibrations.

**New Additions to the Temple**

The forthcoming **Maha Samprokshanam** will also mark several important enhancements to the temple infrastructure. New Vimanams have been constructed for Sri Lakshmi Narasimhar, Sri Andal and Sri Ramar, enhancing the grandeur of the respective sanctums.

The Garudan **Sannidhi** has also been renovated and expanded to make it more spacious. Special arrangements have now been made to facilitate Thirumanjanam and Archana for Sri Garudan, in response to requests from devotees.

The auspicious month of Panguni is one of the most spiritually significant months. The Sri Rama Utsavam, culminating in Sri Rama Navami, will be celebrated with devotional fervour, commemorating the divine birth of Lord Sri Rama, the embodiment of dharma and righteousness. The festival of **Ugadi,** marking the traditional New Year in many regions, will also be observed with special prayers and offerings.

**Panguni Uthiram** holds immense significance in Srivaishnavite tradition. The day is associated with many divine celestial weddings, symbolising the sacred union of the Lord and His divine consorts. It is considered a highly auspicious day when Sri Mahalakshmi Thayar's divine grace is believed to be especially abundant.

In addition, the traditional **Pallava Utsavam** will also be conducted during this month, continuing the rich heritage.

We convey our **sincere gratitude to all donors and devotees** who have extended their wholehearted support for the successful conduct of the various Utsavams and temple activities. We offer **our special thanks to the numerous donors** whose generous contributions have greatly supported the renovation works. ❇

## New Matrimonial Column

We are also happy to inform our readers that, based on requests from several parents in our community, **Desika Sandesam** will soon introduce a special Matrimonial Column in the magazine as a service to our society. Interested parents may share the details of prospective brides and bridegrooms, and this new feature is proposed to be introduced from the Chithirai issue of the magazine. Parents who wish to participate may kindly send the details in advance so that they can be included in the upcoming issue.

ஸ்ரீ:

| விச்வாவஸு வருட பங்குனி மாத பஞ்சாங்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
| மார்ச் / ஏப்ரல் | பங்குனி | | | | | |
| 15.03.2026 | 1 | ஏகாதசி | ஞாயிறு | ச்ரவணம் | மாதப் பிறப்பு | |
| 16.03.2026 | 2 | த்வாதசி | திங்கள் | அவிட்டம் | ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா ஸம்ப்ரோக்ஷணம் | |
| 17.03.2026 | 3 | த்ரயோதசி | செவ்வாய் | சதயம் | காலை பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 18.03.2026 | 4 | சதுர்தசி / அமாவசை | புதன் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 19.03.2026 | 5 | அமாவசை / ப்ரதமை | வியாழன் | உத்திரட்டாதி | யுகாதி பண்டிகை. ராமர் உத்ஸவம் 1-ம் நாள். காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மதியம் பஞ்சாங்க படனம். மாலை ராமர் திருமஞ்ஜனம். பொழுதுடன் ஆராதனம். பெருமாள் வீதி புறப் பாடு. ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ் தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | யுகாதி உத்ஸவம்: ஸ்ரீ கோபால க்ருஷ்ணன். பஞ்சாங்க படனம்: ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் குடும்பத்தினர். ராமர் உத்ஸவம்: ஸ்ரீ S. ஸுந்தரம் குடும்பத்தினர் |
| 20.03.2026 | 6 | த்விதீயை | வெள்ளி | ரேவதி | ராமர் உத்ஸவம் 2-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ M.A. பார்த்தஸாரதி குடும்பத்தினர் |
| 21.03.2026 | 7 | த்ருதீயை | சனி | அச்வினி | ராமர் உத்ஸவம் 3-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ S. கோபாலன் குடும்பத்தினர் |
| 22.03.2026 | 8 | சதுர்த்தி | ஞாயிறு | பரணி | ராமர் உத்ஸவம் 4-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ M. சக்ரபாணி ஐயங்கார் குடும்பத்தினர். C/o. ஸ்ரீ C. கேசவன் |
| 23.03.2026 | 9 | பஞ்சமி | திங்கள் | க்ருத்திகை | ராமர் உத்ஸவம் 5-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ K. ராமன் குடும்பத்தினர் |
| 24.03.2026 | 10 | ஷஷ்டி | செவ்வாய் | ரோஹிணி | ராமர் உத்ஸவம் 6-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ V.C. முரளிதரன் குடும்பத்தினர் |
| 25.03.2026 | 11 | ஸப்தமி | புதன் | ம்ருகசீர்ஷம் | ராமர் உத்ஸவம் 7-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ ராம்ப்ரசாத் பார்த்தஸாரதி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 26.03.2026 | 12 | அஷ்டமி | வியாழன் | திருவாதிரை | ராமர் உத்ஸவம் 8-ம் நாள். காலை ராமர் திருமஞ்ஜனம். மாலை ராமர் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோஹன் |
| 27.03.2026 | 13 | நவமி | வெள்ளி | புனர்வஸு | ராமர் உத்ஸவம் 9-ம் நாள். ஸ்ரீராம நவமி. காலை ராமர் மூலவர், உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை ராமர் வீதிபுறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | திருமஞ்ஜனம்: ஸ்ரீ பாஷ்யம் குடும்பத்தினர். ராமர் உத்ஸவம்: V.D.R. பண்ட். ஸ்ரீமதி அம்புஜம் அனந்தராமன் |
| 28.03.2026 | 14 | தசமி | சனி | புஷ்யம் | ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம். காலை திருமஞ்ஜனம். மாலை பொழுதுடன் ஆராதனம். பின்பு ராமர் வீதிபுறப்பாடு | ஸ்ரீ K.J. சுகுமார் |
| 29.03.2026 | 15 | ஏகாதசி | ஞாயிறு | ஆயில்யம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ K. கோபால தேசிகன் |
| 30.03.2026 | 16 | த்வாதசி | திங்கள் | மகம் | திருமழிசைப்பிரான் | |
| 31.03.2026 | 17 | த்ரயோதசி / சதுர்தசி | செவ்வாய் | பூரம் | ஆண்டாள் | |
| 01.04.2026 | 18 | சதுர்தசி / பௌர்ணமி | புதன் | உத்திரம் | பங்குனி உத்திரம். காலை பெருமாள், தாயார் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. பின்பு தாயாருடன் பத்தி உலாத்தல். இரவு திருக்கல்யாண உத்ஸவம். சேர்த்தி ஸேவை | ஸ்ரீமதி ப்ரேமா கஸ்தூரி |
| 02.04.2026 | 19 | பௌர்ணமி / ப்ரதமை | வியாழன் | ஹஸ்தம் | ஊர்கோல உத்ஸவம். மாலை பொழுதுடன் ஆராதனம். பெருமாள், தாயார், ஆண்டாள் உள்புறப்பாடு. பின்பு பெருமாள், ஆண்டாள் வீதிபுறப்பாடு | ஸ்ரீமதி ப்ரேமா கஸ்தூரி |
| 03.04.2026 | 20 | ப்ரதமை / த்விதீயை | வெள்ளி | சித்திரை | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ K. கோபால தேசிகன் |
| 04.04.2026 | 21 | த்விதீயை / த்ருதீயை | சனி | ஸ்வாதி | நரஸிம்ஹர் திருமஞ்ஜனம், ஆஸ்தானம் | |
| 05.04.2026 | 22 | த்ருதீயை / சதுர்த்தி | ஞாயிறு | விசாகம் | நம்மாழ்வார் | |
| 06.04.2026 | 23 | சதுர்த்தி | திங்கள் | அனுஷம் | நாதமுனிகள் | |
| 07.04.2026 | 24 | பஞ்சமி | செவ்வாய் | கேட்டை | தொண்டரடிப்பொடி | |
| 08.04.2026 | 25 | ஷஷ்டி | புதன் | மூலம் | திருமால்வடை | |
| 09.04.2026 | 26 | ஸப்தமி | வியாழன் | மூலம் / பூராடம் | பல்லவ உத்ஸவ அங்குரார்ப்பணம் | நாவல்பக்கம் S. வெங்கடேசன் |
| 10.04.2026 | 27 | அஷ்டமி | வெள்ளி | பூராடம் / உத்திராடம் | பல்லவ உத்ஸவம் 1-ம் நாள். காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். காலை புராண படனம். மாலை வீதிபுறப்பாடு | 1. ஸ்ரீ N.V. பாலாஜி, 2. ஸ்ரீ M.V. ஸந்தானம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11.04.2026 | 28 | நவமி | சனி | உத்திராடம் | பல்லவ உத்ஸவம் 2-ம் நாள். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு | 1. ஸ்ரீ S.S. ராகவன், 2. ஸ்ரீ R. பார்த்த ஸாரதி |
| 12.04.2026 | 29 | தசமி | ஞாயிறு | ச்ரவணம் | பல்லவ உத்ஸவம் 3-ம் நாள். காலை பெருமாள், தேசிகன் திருமஞ்ஜனம். புராண படனம். மாலை பெருமாள், தேசிகன் வீதிபுறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | பல்லவ உத்ஸவம்: 1. ஸ்ரீ R. முகுந்தன், 2. ஸ்ரீ V.P. ப்ரேம் குமார், 3. ஸ்ரீ T.C. ரங்கராஜன், 4. ஓங்கூர் ஸ்ரீ வாஸுதேவாச்சார் ஸ்ரீதரன். ச்ரவணம்: ஸ்ரீ வஸந்த் ஷான்பாக் குடும்பத்தினர் |
| 13.04.2026 | 30 | ஏகாதசி | திங்கள் | அவிட்டம் | பெருமாள், உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. பாஷ்யகாரர் உத்ஸவம் 1-ம் நாள். காலை வீதிபுறப்பாடு, திருமஞ்ஜனம். மாலை திருப்பாவை சாற்றுமுறை. இரவு ஆஸ்தானம், திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | ஏகாதசி: ஸ்ரீ S. பாலாஜி. பாஷ்யகாரர் உத்ஸவம்: நெம்பிலி வீரவல்லி குடும்பத்தினர் |

## வைணவ வழக்குச் சொற்கள் ⑲

**பழநடை:** ஸம்ப்ரதாய க்ரமம்

**பூந்தோட்டம்:** படப்பை:

**பரக்கழிதல்:** (1) பழி விளைதல், (2) அடக்கமின்மை

**பரிசு:** பெருமை, தன்மை

**பரிக்ரஹம்:** (இறைவனால்) கைப்பற்றப்படுதல்

**பரிதி:** ஸமித்து

**பட்டி மேய்தல்:** தன் இஷ்டப்படி நடத்தல்.

**பவளிம்பு சேவை:** சயனம்

**பணிகொள்ளல்:** அடிமையாக்குதல்

**பாகு:** பாங்கு; style

**பாசுரம்:** நாலாயிர திவ்ய பிரபந்ததில் அடங்கிய ஒவ்வாரு செய்யுளும்

**பாங்கி:** தோழி

**பாராயணம்:** முற்றோதல்; வாய்விட்டு ஒலி முறைப்படி (நூல்களை) ஓதல்

**பாரை:** மண்வெட்டி

**பாநீயம்:** பருகும் நீர்

**பாஷ்யம்:** விரிவுரை

**பாரதந்த்ரியம்:** இட்ட வழக்காய் இருத்தல்; தனக்கு சுதந்திரமின்மையை உணர்ந்து நாராயணனையே முழுதுமாகச் சார்ந்திருத்தவாகிய தன்மை;அவனுக்கே ஆட்பட்டிருத்தல்

**பாதுகை:** திருவடி நிலை

**பாத்யம்:** பாதங்களில் நீர் ஸமர்ப்பித்தல்

**பூமி:** பாரகம் :

**பாரணை:** உபவாஸத்திற்குப்பின் ஆராதனம் செய்து, அதிதிக்கு உணவிட்டு, சாப்பிடுதல்

**பாரித்தல்:** மனத்தில் பெருக நினைத்தல், மிகவும் விரும்புதல்

**பாடி:** ஊர்

**ப்ரவர்த்தகர்:** பரப்புபவர், ஓங்கச் செய்பவர்; வளர்ப்பவர்; propagandist

**ப்ரபன்னன்:** பிரபத்தி செய்தவன்; பகவானே வழியும் அதன் பலனும் ஆக இருக்கிறான் என்று உணர்ந்து அவனை அடையமுயல்பவன் (பஞ்ச ஸம்ஸ்காரம், ப்ரபத்தி இவை நிறைவேறிய வைணவன்)

**ப்ரபத்தி:** சரணாகதி

**ப்ரம்ம கிரந்தி:** பூணூல் முடிச்சு

**ப்ரதிபாதனம்:** (1) விளக்கிக் கூறுதல், (2) ஸ்தாபித்தல், (3) நிரூபித்தல்

**ப்ரபை:** உத்ஸவர் தொட்டியின் பின்னால் உள்ள வளைவான உலோக அமைப்பு

**ப்ரகிருதம்:** இப்போது இருக்கின்ற, தற்போதைய

**ப்ரமாணம்:** (1) அடிப்படை, (2) உண்மை அறிவுக் குக் காரணம், (3) அடிப்படையான சாஸ்த்ரம் (நூல்)

**ப்ரணய கலகம்:** ஊடல்

**பிராட்டி:** (1) லட்சுமி, (2) தேவி, (3) ஸீதை

**பீதகம்:** (1) தங்கம், (2) மஞ்சள்

**பீதாம்பரம:** பெருமாள் வஸ்த்ரம் (துணி), பொன்னாடை

**புத்தகம்:** புதிய வீடு

**புக்ககம்:** புகுந்த வீடு; In-laws' house

**'தென்னிந்திய வைணவம் - ஓர் அறிமுகம்' நூலிலிருந்து**

(தொடரும்...)

ஸ்ரீ:

# தத்வங்கள்

**44-ம் பட்டம் முக்கூர் ஸ்ரீமத் அழகியசிங்கரின் அருள்மொழிகளிலிருந்து**

ஆஸ்திகர்களாக இருக்கிறவர்களும், ஆஸ்திகர்களாக ஆக வேண்டியவர்களும், இதரர்களை ஆஸ்திகர்களாக நினைத்திருப்பவர்களும் இப்பொழுது எழுதப் போகிற வேதாந்த ஸாரமான விஷயங்களை ஒரு தடவைக்குப் பத்துத் தடவைகள் படித்து மனத்தில் வைத்துக்கொள்ளுங்கள். பிறகு இதில் வரும் ஸந்தேஹங்களைப் பெரியோர்களிடத்தில் கேட்டுத் தெரிந்துகொண்டு நடவடிக்கையில் (அநுஷ்டானத்தில்) கொண்டு வந்தார்களேயானால் ஸகல விதமான க்ஷேமங்களையும் பெறலாம்.

வேதாந்தத்தில் ஸாரமாகச் சொல்லியிருக்கிற விஷயங்களை ஆசார்யர்கள் இவ்விதம் உபதேசிக்கிறார்கள்; அதாவது, எல்லா உலகிலும் உள்ள வஸ்து ஒன்றே. அதைப் பிரித்துப் பார்த்தால் இரண்டாக இருக்கிறது. வேறு விதமாகப் பிரித்துப் பார்த்தால் மூன்றாக இருக்கிறது. அதில் பிரித்துப் பார்த்தால் நாலாகவும், அது தன்னிலும் பிரித்தால் ஐந்தாகவும் இருக்கிறது என்றும் உபதேசிக்கிறார்கள். அதற்கு மேலும் பிரிவுகள் பார்த்தால் கணக்கிட முடியாதவை இருக்கின்றன.

ஒரு வஸ்து தான் உள்ளது என்று சொன்ன விஷயம் எப்படி என்று கேட்டால் சொல்லுகிறோம்; குலை தள்ளிய ஒரு வாழைமரத்தை மனத்தில் நினைத்துக் கொள்வோம். அதைப் பார்த்ததும் ஒரே வஸ்துவாக நினைக்கிறோம். அந்த மரத்தை உரித்தால் மேல் பட்டைகள், உள் பட்டைகள், அதற்குள் ஒரு தண்டு இவற்றைப் பார்க்கிறோம் அல்லவா? அதைப் போல் பரமாத்மா ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே எங்கும் நிறைந்துள்ள வஸ்து. வாழை மரத்துக்கு மேல் பட்டைகள் போல் கண்ணுக்குத் தெரிகிற அறிவில்லாத (அசித்) வஸ்துக்கள் உள் பட்டைகள் போல் அறிவுள்ள ஜீவாத்மாக்கள். தண்டு போல் பரமாத்மா. இவற்றுக்குள் வாழைத்தண்டு.

அறிவில்லாதவையும் (அசேதநங்களும்) அறிவுள்ளவையும் (ஜீவாத்மாக்களும்) பரமாத்மாவுக்கு உடல்கள். **ஜகத் ஸர்வம் சரீரம் தே** என்று சாஸ்த்ரம் கூறுகிறது. ஆகையால் இவ்வுடல்களோடு கூடின பரமாத்மா ஒருவனே. **ஏகமேவ அத்விதீயம்** என்று உபநிஷத் கூறியதை ஆசார்யர்கள் உபதேசித்தார்கள்.

மேல் உலகில் இரண்டு வஸ்து உள்ளன என்பது எவ்விதம் பொருந்தும்? கேண்மின். பரமாத்மா என்று சொன்னோமே, அவன் பரிபூர்ணமான அறிவுடையவன். உள் பட்டைகள் என்று சொன்ன ஜீவாத்மாக்களும் அறிவுள்ளவையே. ஆகவே பரமாத்மாவும் ஜீவாத்மாவும் அறிவுள்ளவை. பட்டைகள் போல் கண்ணுக்குத் தெரிகிற நமது உடல் முதலியவை அறிவில்லாதவை. ஆக அறிவுள்ள ஜீவாத்மா, பரமாத்மா இரண்டும் சேர்ந்து அறிவுள்ளது ஒன்று, அறிவில்லாதது ஒன்று என்று இரண்டாக உபதேசிக்கிறார்கள்.

மூன்று ஆவது எப்படி என்றால்? பரமாத்மா, ஜீவாத்மா, (அறிவில்லாத) அசேதனம் என்று மூன்றாகப் பிரித்து உபதேசிக்கிறார்கள்.

நாலு விதமாக எப்படிச் சொல்லுகிறார்கள் என்றால் ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் அறிவுள்ளவர்களாகச் சொன்னோம் அல்லவா? அதில் அறிவு வேறு, அறிவுடைய ஜீவாத்மா, பரமாத்மா வேறாக இருக்கிறபடியால், ஜீவாத்மா, பரமாத்மா, அறிவு (ஜ்ஞாநம்), எப்போதும் அறிவில்லாத அசேதநம் என்று நாலாகப் பிரித்து உபதேசித்தார்கள்.

ஐந்து என்று எப்படி உபதேசிக்கலாமென்றால், அறிவில்லாத வஸ்து என்று சொன்னோமே, அது ப்ரக்ருதி, காலம், சுத்த ஸத்வம் என்று மூன்று வகைப்படும். அறிவுள்ள ஜீவாத்மா, பரமாத்மா என இரண்டு, ப்ரக்ருதி, காலம், சுத்த ஸத்வம் என அசேதநம் மூன்று, ஆக ஐந்து என்று உபதேசிக்கிறார்கள். இதற்கு மேல் உள்ள பிரிவுகள் எல்லையில் அடங்காதவை என்று சொன்னோம் அல்லவா? அதையும் விவரித்துக் கூறுகிறோம், கேளுங்கள். இதில் புரியாத விஷயம் ஒன்றுமில்லை. ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக ஜ்ஞாபகமாகப் படித்தால் நன்றாக மனதில் பதியும்.

முதலில் பரமாத்மாவை நினைத்துக் கொள்ளுங்கள். பிறகு உங்களுக்கு யார் ஆசார்யர்களோ அவர்களை நினைத்துக் கொண்டு இதைப் படியுங்கள். பகவான் க்ருபை செய்து மனதில் நிலைக்க வைப்பார். முதலில் பரமாத்மா ஸ்ரீமந்நாராயணன் என்று சொன்னோம். அவன் எல்லா விதத்திலும் தன்னைப் போலுள்ளவளாகவும், தன்னை நினைக்கிறவர்களோ நினைக்காதவர்களோ ஆஸ்திகர்களோ நாஸ்திகர்களோ எல்லாருக்கும் ஸகல ஸம்பத்துக்களையும் கொடுக்கிற ஸ்வபாவமுள்ளவளாகவும் இருக்கிற மஹாலக்ஷ்மியை முக்யமான பத்னியாக உடையவன். அந்த ஸ்ரீமந்நாராயணன் வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்றும், கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுஸூதனன், த்ரிவிக்ரமன், வாமனன், ஸ்ரீதரன்,

ஹ்ருஷீகேசன், பத்மநாபன், தாமோதரன் என்றும், மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரஸிம்ஹ, வாமந, பரசுராம, கௌஸல்யா ராம, பலராம, க்ருஷ்ண, கல்கி என்றும், ஹயக்ரீவன் பூவராஹன் என்றும் எத்தனையோ கோடி அந்தர்யாமி என்றும், எல்லையில்லாத அர்ச்சைகள் என்றும் அவதாரங்கள் செய்து நம்மைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறான்.


இதையெல்லாம் நினைத்து ஆசார்ய ஸார்வபௌமரான நம் ஸ்வாமி தேசிகன் **த்வயி ரக்ஷதி ரக்ஷகை:** கிமந்யை: **த்வயிசாரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை: இதி நிஸ்சிததீ: ஸ்ரயாமி நித்யம்** என்று தீர்மானமாகச் சொல்லி ஸ்தோத்ரம் செய்கிறார். இதன் பொருள்: ''ஹே லக்ஷ்மீந்ருஸிம்ஹ! நீ ரக்ஷிக்க ஆரம்பித்துவிட்டால் இதர தெய்வங்களினாலோ இதர ராஜாக்களினாலோ இதர தனிகர்களாலோ நமக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. நீ ரக்ஷிக்கத் திருவுள்ளம் பற்றா விட்டால் இதர தெய்வங்களோ அரசர்களோ எங்களை ரக்ஷிக்கச் சக்தியற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். இம்மாதிரியான த்ருட புத்தியோடு உம்மை ஆச்ரயிக்கிறேன்.''

**உட்பிரிவுகள்**

பரமாத்மாவுக்கு அடுத்தபடியாக ஜீவாத்மா என்று சொன்னோம் அல்லவா? அவர்களின் உட்பிரிவுகள் - ப்ரஹ்மா, சிவன், இந்த்ரன், வஸுக்கள், ஸூர்யன், சந்த்ரன், அக்நி, வாயு தேவதைகள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுக்கள், ரிஷிகள், ஸாமான்ய மனிதர்கள், அவர்களில் ஸ்த்ரீகள், புருஷர்கள், ம்ருகங்கள், மரங்கள், செடிகள், கொடிகள், பக்ஷிகள், பாம்பு முதலியவை, ஜலஜந்துக்கள், ஈ, எறும்பு, கொசு முதலியவையாகப் பிறவி எடுத்திருக்கிற ஜீவகோடிகள் எத்தனையோ. இது ஒரு பிரிவு. இந்த வகை ப்ரஹ்மாண்டத்தில் உள்ளவை.

இதைப்போல் அநேக கோடி ப்ரஹ்மாண்டம். வைகுண்டத்தில் எப்போதும் பெருமாளைப் போலவே பரமானந்தத்தோடு இருக்கிறவர்கள் எத்தனையோ கோடிப் பேர்கள். ப்ரஹ்மாண்டத்தில் பிறந்து பகவானை ஆராதித்து எத்தனையோ ப்ரஹ்மாதி தேவதைகள் வைகுண்டத்துக்குச் சென்று ஆனந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். பகவானைச் சரணமடைந்து வைகுந்தம் சென்ற ரிஷிகளும் மனுஷ்யர் முதலானவர்களும் நிறைந்திருக்கிறார்கள். கணக்குச் சொல்ல முடியாது. இங்கே இருக்கிறவர்கள் பத்தர்கள். வைகுந்தம் போனவர்கள் முக்தர்கள். அங்கேயே எப்போதும் உள்ளவர்கள் நித்யஸூரிகள்.

கண்ணுக்குத் தெரிகிற உருவங்களுக்கெல்லாம் மூலகாரணமான வஸ்துவுக்கு ப்ரக்ருதி என்று



பெயர். அது மஹத், அஹங்காரம், தந்மாத்ரை, ஆகாசம், வாயு, அக்நி, ஜலம், ப்ருதிவீ என்றும், பதினோரு இந்த்ரியங்களாகவும் ஆகியிருக்கிறது. பதினோரு இந்த்ரியங்கள் பிறந்திருக்கிற ஒரு ஜீவாத்மாவுக்கு. இப்படி எத்தனை கோடி ஜீவாத்மாக்கள் பிறந்திருக்கின்றனரோ அத்தனை கோடி ஜீவாத்மாக்களுக்கும் தனித் தனியாகப் பதினோரு இந்த்ரியங்கள் உண்டாகியிருக்கின்றன. ப்ரக்ருதி, மஹத், அஹங்கார க்ரமமாகத்,தான் எல்லா உலகங்களும் ஸ்ருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன. ஸமுத்ரம், மலைகள் எல்லாம் (மேற்கூறப்பட்ட) இருபத்து நான்கு வஸ்துக்களிலிருந்து ஸ்ருஷ்டிக்கப் பட்டவை தாம்.

அடுத்தது காலம். அது விநாடி, நிமிஷம், நாழிகை, முஹூர்த்தம், பகல், இரவு, தினம், வாரம், பக்ஷம், மாஸம், ருது, உத்தராயணம், தக்ஷிணாயநம், வருஷம், யுகம், பரார்த்தம் என்று வழங்கப் படுகிறது. சுத்த ஸத்வம் - வைகுண்ட லோகம். அவ்விடத்திலுள்ள வஸ்துக்களுக்கெல்லாம் அது காரணம். அதிலிருந்து தான் அங்குள்ள கோபுரம், மதிள் முதலியவையெல்லாம் உண்டாகியிருக்கின்றன. ஆநந்த மயமான லோகம். எப்போதும் ஸுகமாகவே இருக்கும் என்று ஆசார்யர்கள் வேதாந்தங்களிலுள்ள விஷயங்களைச் சுருக்கமாக உபதேசித்திருக்கிறார்கள். அவர்களுடைய திருவுள்ளம் என்னவென்றால், விஷயங்களைத் தெரிந்துகொண்டு பகவானை ஆச்ரயித்து எல்லாரும் நல்ல கதியை அடைய வேண்டும் என்பதேயாம்.

இந்த உபதேசங்களைக் கேட்டு அப்படியே நடத்தி முக்தியடைந்து எத்தனையோ பேர்கள் ஸ்ரீவைகுண்டத்தில் வஸிக்கிறார்கள். இவ்வுபதேசங் களைக் கேட்டு அப்படியே செய்ய வேண்டும் என்று நினைத்திருப்பவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். இவ்வுபதேசங்களைக் கேட்டுவிட்டு மாத்ரம் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். கேட்க இஷ்டமில்லாத பேர்களும் எத்தனையோ இருக்கிறார்கள். இருக்கட்டும். ஆனாலும் கொஞ்சம் சொல்லுவோம்.

**யார்மேல் பிசகு?**

இந்த ஜீவாத்மாக்கள் நல்ல கதியை அடையத் தான் பகவான் பூமண்டலத்தில் ஆழ்வார், ஆசார்யர்களை அவதரிக்கச் செய்தான். நமக்கும் நல்ல புத்தி, கை, கால் முதலியவற்றைக் கொடுத்திருக்கிறான். சாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்து அவற்றை உபதேசிக்கப் பெரியோர்களையும் நமக்கு அளித்துள்ளான். இனி என்ன தான் செய்ய முடியும்? இவ்வளவு ஸௌகர்யங்கள் இருக்கும்போதும் உபயோகப்படுத்திக் கொள்ளாமற் போனால் யார்மேல் பிசகு? திருப்பாற்கடலைப் பார்த்து ஒருவன் பாலைப் பருக நினைத்தான். வாயைத் துணியால் கட்டிக் கொண்டு முழுகிவிட்டு வந்தானேயானால் பால் சாப்பிட முடியுமா? பாலின் ருசி எப்படித் தெரியும்? அதைப் போலத்தான் இவ்வுலகில் உள்ள சோம்பேறிகளின் கதி இருக்கிறது. இவ்விஷயத்தை அரசாணி பாலை ஸ்வாமி நன்கு மனத்தில் படும்படி சொல்லியிருக்கிறார்.

*சாஸ்த்ரம் பூரி நிஜஸ்வரூபமதயே ஸ்வாராதநார்த்தம்*
*வபு: ஸ்வத்யாநாய மநஸ்ச புத்திமநகாம் லப்தும் ச*
*தீர்த்தாதிகம் । தத்வாங்யப்யுபதேஷ்டுமுத்தம குரூந்*
*தத்வாநுக்ருஹ்ணாதி ந: ஸம்ஸாரே ததபி ப்ரமேம யதி*
*கிம் குர்வீத ஸர்வேச்வர: ॥*

பகவான் தன்னை நன்றாக அறிந்து கொள்வதற்காக அவரவர்களுக்குத் தகுந்தபடி சாஸ்த்ரங்களைத் தானே நேரிலும் மஹர்ஷிகள் மூலமாகவும் நிறையச் செய்து கொடுத்திருக்கிறான். அப்படிச் சாஸ்த்ரங்களை நன்றாகத் தெரிந்து, தன்னை ஆராதித்து நல்ல கதியை அடைவதற்காக அழகான சரீரத்தைக் கொடுத்திருக்கிறான். தன்னை நன்றாக த்யானம் செய்வதற்காகநல்லபுத்தியையும்கொடுத்திருக்கிறான். பாப விசேஷத்தினாலே கெட்டுப் போயிருக்கிற புத்தியைப் பரிசுத்தமாக்க, கங்கை, காவேரி, புஷ்கரம், சக்ர தீர்த்தம் முதலிய புண்ய தீர்த்தங்களையும் உண்டுபண்ணியிருக்கிறான். சாஸ்த்ரங்களில் சொன்ன வாஸ்தவமான அர்த்தங்களை நன்றாக உபதேசிக்கக் கூடிய உத்தமமான ஆசார்யர்களையும் உண்டு பண்ணியிருக்கிறான். எப்போது நாம் கேட்டாலும் நமக்கு உபதேசிக்கும் படி கட்டளை யிட்டிருக்கிறான்.

**ஸர்வேச்வரன் பொதுவானவன்**

இவ்விதம் நம்மை அநுக்ரஹித்து நமக்கு ஸௌகர்யங் களைச் செய்து கொடுத்திருக்கும்போதும் இவற்றை எல்லாம் உபயோகப் படுத்தாமல் ஸம்ஸார மண்டலத்திலேயே பிறப்பதும் இறப்பதுமாகச் சுழன்று கொண்டிருந்தோமானால் இதற்கு மேல் பகவான் என்னதான் செய்வான்? ஸர்வேச்வரன் எல்லாருக்கும் பொதுவானவன் என்று சொல்லியிருக்கிறான். பகவான் கைக்குழந்தை மாதிரி. மிகவும் தயையுடையவன். யாரையாவது கோவிந்தா என்று கூப்பிட்டால் தன்னைத்தான் கூப்பிடுவதாக நினைத்து ஓடி வருவான். எந்தக் குலத்தவனாக இருந்தாலும் பூஜித்தால் பெற்றுக் கொள்வான். எந்தக் குலத்தவனாக இருந்தாலும் மோக்ஷம் வேண்டுமென்று சரணமடைந்தால் மோக்ஷம் தருவான். எந்தக் குலத்தவனாக இருந்தாலும் ஸந்தானம், ஸம்பத்து ஆயுஸ்ஸு முதலியவை வேண்டும் என்று அவனை ஆராதித்தால் அவரவர்கள் விச்வாஸத்துக்குத் தக்கபடி பலனைக் கட்டாயம் கொடுப்பான். புத்திசாலிகளாகப் பிறந்த நாம் அமெரிக்கர்கள் சந்த்ரனைப் பிடிப்பது போல் ஆனந்தமான வைகுந்தத்தில் ஏறி பகவானை அடைய, அணுசக்தியுள்ள மனஸ்ஸை ஒரு விமானமாகச் செய்து ஆத்மாவை வைத்து ஏறினால், சீக்ரத்தில் வைகுந்தமேறி, பகவானை அடைந்து ஆனந்திக்கலாம்.

வெல்லம் என்றால் தித்திக்காது. சாப்பிட்டால் தான் ருசி தெரியும். அதைப் போல் விஷயங்களைத் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது. தெரிந்துகொண்ட படி நடக்க வேண்டும். நித்யம் அஷ்டாக்ஷர ஜபம் செய்யுங்கள். ஆசார்யர்களை த்யாநம் செய்யுங்கள்.

*ந ஹ்யம் மயாநி தீர்த்தாநி ந தேவா ம்ருச்சிலாமயா ।*
*தே புநந்த்யுருகாலேந தர்சநாதேவ ஸாதவ: ॥*

என்ற படி பெருமாள் ஸேவையினாலும், நல்ல புண்ய தீர்த்த ஸ்நானத்தினாலும் போகக் கூடிய பாவங்களெல்லாம் ஸாது தர்சனத்தினால் சடக்கெனப் போய்விடுவதோடு பாகவத ஸேவையினால் லக்ஷ்மீ கடாக்ஷமும் உண்டாகும். பிறகு ஸதாசார்ய ஸம்பந்தமும் உண்டாகும். அவர்களின் உபதேசத்தினால் ஸ்ரீமந்நாராயண சரணங்களை சரணமாக அடைந்து அவனுடைய கடாக்ஷத்தினால் ஆயுராரோக்ய பெற்றுப் பரமானந்தத்தை அடையலாம். ஐச்வர்யங்களைப் பெறலாம்.



# *With Pranams:*

**Shri Thenandal Enterprises**
82/98, Sri Lakshmi Nagar,
I Main Road, Alwar Thirunagar,
Chennai 600 087.

**SVDD thanks Shri Thenandal Enterprises**
for sponsoring this month's issue of Desika Sandesam






## பாலாலயம்















## பாலாலயம்
















## பாலாலயம்














ஸ்ரீ:





## பாலாலயம்














பாலாலயம்













பாதுகா ஸஹஸ்ர உத்ஸவம்















## தவனோத்ஸவம்












**தவனோத்ஸவம்**










## மாசி - பௌர்ணமி ஸமுத்ர ஸ்நானம்











ஸ்ரீ:






## மாசி - பௌர்ணமி ஸமுத்ர ஸ்நானம்













## அன்னகூட திருப்பாவாடை உத்ஸவம்





அன்னகூட திருப்பாவாடை உத்ஸவம்








## அன்னகூட திருப்பாவாடை உத்ஸவம்











ஸ்ரீ:










## நூதன மண்டப க்ருஹ ப்ரவேசம்











## நூதன மண்டப க்ருஹ ப்ரவேசம்






















நூதன மண்டப க்ருஹ ப்ரவேசம்



ஸ்ரீ:

# மார்க்கண்டேயனும் கரி

ஸ்ரீ உ.வே. பழவேரி சக்ரவர்த்தி ரா. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

தலைப்பு ஸ்வாமி நம்மாழ்வாரின் சொற்றொடர் என அருளிச்செயலில் பரிசயமுடையார் அறிவர். ஆழ்வார் பரதேவதை ஸ்ரீமந்நாராயணனே என விளக்குமிடத்தெல்லாம் மார்க்கண்டேயரின் கதையைக் குறிப்பிடுகின்றார். இவ்விஷயத்தில் ஆழ்வாரின் மூன்று பாசுரங்களின் சொற்றொடரை மட்டும் காண்போம். மூன்று திருவாய்மொழி பாசுரங்கள், அவற்றிலும் தேவையான அளவு பொருள் மட்டும் இக்கட்டுரையில் விளக்கப் படுகின்றது.

ஆழ்வார் பாமரர்களையும் பரமபாகவதர்களாக்க இயற்றிய **ஒன்றுந்தேவும்** பதிகத்தில் எட்டாம் பாசுரத்தில் **புக்கடிமையினால் தன்னைக்கண்ட மார்க்கண்டேயன் அவனை நக்கபிரானும் அன்றுய்யக் கொண்டது நாராயணன் அருளே** என அருளிச்செய்துள்ளார். ஒன்றுந்தேவால் தேறியமஞானம் பெற்ற பலரைக் கண்டு மகிழ்ந்து **பொலிகபொலிக** என்னும் பதிகத்தில் அவர்களுக்குப் பல்லாண்டு பாடினார்.

வெகுநாள் மற்றவர்களைத் தொழுத பழக்கத்தால் மற்ற தேவதைகளை விடத்துணியாத, அரிசியில் கல்போலே பாகவதகோஷ்டியில் கலந்திருந்த வெகுசிலரைக் குறித்து இப்பதிகத்திலே அறிவுரை கூறுங்காலத்தும் ஏழாம் பாசுரத்தில் **நிறுத்தி நும்முள்ளத்துக் கொள்ளும் தெய்வங்கள் உம்மை உய்யக்கொள் மறுத்தும் அவனோடே கண்டீர் மார்க்கண்டேயனும் கரியே** என அருளிச்செய்துள்ளார். பரம்பொருள் ராமன் முதலிய அவதாரங்களை நமக்காக எடுத்தும் அவற்றை எல்லாம் அனுபவித்து அவனை அடையமுற்படாதே தனக்கு உயிரான எம்பெருமான் உடனிருக்க அவனை விட்டு, தன் வீட்டிலே புதையல் இருக்க அதன் மேலே புறங்கால் வீங்கத் தேடி அலையும் மானிடரைப் போலே ஓடித் திரியும் பாமரரைப் பார்த்து வியப்புற்றுப் பேசும் கற்பார் பதிகம் ஏழாம் பாசுரத்தில்,

**கண்டும் தெளிந்தும் கற்றார் கண்ணற்கு ஆளன்றி ஆவரோ? வண்டுண் மலர்த்தொங்கல் மார்க்கண்டேயனுக்கு வாழுநாள் இண்டைச் சடைமுடி ஈசன் உடன்கொண்டு உசாச்செல்ல கொண்டங்குத் தன்னொடும் கொண்டு உடன்சென்றது உணர்ந்துமே.**

என அருளிச்செய்துள்ளார்.

இப்பாசுரங்களின் ஒவ்வொரு சொல்லின் பொருளும் கூற சிறுநூலியற்ற வேண்டியதாகும். முக்யமாக மார்க்கண்டேயன் மரணத்தின் வாயிலிருந்து மீண்டு ஆயுளைப்பெற்றது பகவானின் அருளால் அன்றி சிவபெருமானால் அல்ல; சிவபெருமான் செய்தது சிபாரிசு மட்டுமே என்பதை உணரவேண்டிய அளவுக்கு மட்டும் பொருள் காண்போம்.



ஸ்ரீ ம்ருகண்டு முனிவருக்குப் பிள்ளை பிறந்தது. அப்பிள்ளை பதினாறு வயதினில் மரணம் எய்துவான் என அறிந்த அவர் மிகவும் வேதனை உற்றார். அப்போது அவர் பிள்ளையான மார்க்கண்டேயன் சிவபெருமானைக் குறித்து தவம் இயற்றி தான் ஆயுளைப்பெற்று தந்தையின் துயரைத் தீர்க்க எண்ணினான். அங்ஙனம் அவன் சிவனைப் பூசித்துவர, நாட்கள் உருண்டோட, காலனார் தமர் அவனிடம் நெருங்க, அவர்களைத் தவக்கனல் சுட்டெரிக்க, மீண்டோடி யமனிடம் விண்ணப்பிக்க, அவன் தன் மந்திரிகளில் ஒருவனை மார்க்கண்டேயனிடம் அனுப்ப, அவனையும் மார்க்கண்டேயன் திருப்பி அனுப்பினான். இதனால் கோபங்கொண்ட யமன், தானே மார்க்கண்டேயனை அணுக அவன் சிவலிங்கத்தைக் கட்டிக்கொண்டான். யமன் சிவலிங்கத்தையும் சேர்த்து இழுக்க, அச்சிவலிங்கத்திலிருந்து சிவபெருமான் வெளிப்பட்டு யமனைக் காலால் உதைத்துத் தள்ளினான்; என்றும் பதினாறு ஆண்டுடையவனாய் வாழ மார்க்கண்டேயனை அசீர்வதித்தான் என்ற அளவான கதையே உலகில் நிலவிவருகின்றது. இக்கதையின் முழு விரிவை ஐந்தாம் வேதமென்று போற்றப்படுவதாய், புராணங்களிலும் அதிக முக்கியத்துவம் பெற்ற ப்ரமாணமான இதிஹாஸத்தில் ஒன்றான மஹாபாரத்தின் படியும், ஸ்ரீமத் பாகவதபுராணத்தின்



படியும் கண்டால் மார்க்கண்டேயனுக்கு இவ்வரம் கிட்ட சிவபெருமான் புருஷகாரம் (சிபாரிசு) மட்டுமே செய்தார்; நீண்ட ஆயுள் நாராயணனாலேயே வழங்கப்பட்டது என்பதைத் தெளிவாக அறியலாம்.

ஸ்ரீமந்மஹாபாரதத்தில் வனபர்வாவில் 192 அத்யாயத்தில் தர்மபுத்திரரிடம் மார்க்கண்டேயர் உரையாடியபோது, அதில் எம்பெருமான் வார்த்தையாக, சிவபெருமான் நாரயணனை அடைந்தே தனக்கு ஆயுள்பெற உதவியதைக் கூறியுள்ளதாலும், மேலும் ஆயுள் பெற்றதால் அவ்வூழிமுதல்வனை ப்ரளயகாலத்திலே ஆலிலையில் உலகமுண்டபெருவாயனாகத் தான் கண்டதைக் கூறியதாலும் தெளிவாக அறியலாம். முதல் திருவந்தாதியில் **பாலன் தனதுருவாய், செற்றெழுந்து தீவிழித்து** பாசுரங்களில் மார்க்கண்டேயர் ஊழிமுதல்வனை ப்ரளயகாலத்தில் கண்ட வ்ருத்தாந்தம் மஹாபாரதத்தில் கூறியபடி குறிப்பிடப்பட்டுள்ளது. **ஆலமாமத்தின் இலைமேல் ஒருபாலகனாய் ஞாலமேழுமுண்டான்** என்ற பாண்பெருமாள் சொற்றொடரும் இதையே கூறுகின்றது. விரிவுக்கஞ்சி அவை இக்கட்டுரையில் விடப்படுகின்றன.

அத்தகைய எம்பெருமானே கண்ணனாய் இருப்பதையும், அவனை அடைக்கலம் புகுந்து துன்பத்தைப் போக்கிக் கொள்ளவதை விட வேறு வழியின்மையையும், பஞ்சபாண்டவர்களுக்கு மார்க்கண்டேயர் உபதேசித்ததையும், உபதேசத்தை ஏற்று பாஞ்சாலியுடன் கூடிய ஐவரும் கண்ணனிடம் அடக்கலம் புகுந்தனர் என்பதையும் மஹாபாரதம் கூறுகின்றது.

ஸ்ரீமத் பாகவத்திலும் பன்னிரண்டாம் ஸ்கந்தத்தில் எட்டாம் அத்யாயத்தில் மார்க்கண்டேயர் எம்பெருமான் அருளால்சிரஞ்சீவியாய்இருந்துஒன்றுந்தேவும்உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா அன்று எம்பெருமானை ஆலிலையில் கண்டது விளக்கப்பட்டுள்ளது. ஹ்ருஷீகேசனான எம்பெருமானால் வெல்லப்படாத மரணத்தை வென்றவர் அவர் என்றும், அவனையே உபாயமாகப் பற்றி உய்ந்துபோனார் அவர் என்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இவற்றை எல்லாம் திருவுள்ளம் பற்றியே ஆழ்வார் **மார்க்கண்டேயனுக்கு வாழுநாள்** (ஆயுளுக்காக) **இண்டைச் சடைமுடி ஈசன்** (தானும் எம்பெருமானைக் குறித்துத் தவமியற்றியே பலன்தரவல்லவன் என்பதைக்காட்டும்படி சடைமுடி தரித்திருக்கும் ஈசன்) **உடன்கொண்டு** (தன்னை அடைந்த மார்க்கண்டேயன் பலனை பெற்றவனாக வேண்டும் என்று) **உசாச்செல்ல** (உசாத்துணையாக - சிபாரிசுசெய்யச் செல்ல) என்று அருளிச்செய்தார்.

ஆகையால் எம்பெருமான் அருளாலேயே வீடு ஈறான எப்பலனும் கிட்டவல்லதாகும்; மற்ற தேவதைகளை ஆச்ரயித்தாலும் அவர்கள் எம்பெருமானைக் கிட்டியே பலனைப் பெற்றுத்தரவல்லவர் என்பதற்கு **மார்க்கண்டேனும் கரியே** - சிவபெருமானால் ஆயுள்பெற்றான் என உலகோர்களால் வழக்கப்படும் மார்க்கண்டேயனும் ஸாக்ஷி ஆவான் என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார்.

கரி என்ற சொல்லுக்கு நெருப்பால் உண்டாக்கப்படும் கரி, அல்லது யானை முதலிய பொருட்கள் இப்பாசுரத்தில் பொருந்தாது. ஸாக்ஷி – சான்று என்ற பொருளே பொருந்தும். ஸ்ரீகலியன் **கொங்குண்வண்டே கரியாக வந்தான் கொடியேற்கு முன் நங்கள் ஈசன் நமக்கே பணித்த மொழி செய்திலன்** என்ற பாசுரத்தில் கரி என்ற சொல்லை ஸாக்ஷி என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளதைக் காணலாம். ''பாவியேன் விஷயத்தில் அவன் திருமார்வில் அணியப்பெற்ற துழாய்மாலைகளில் தேன் உண்ணும் வண்டுகளே ஸாக்ஷியாக வந்தான். அப்போது அவன் கூறிய வார்த்தைப்படி இப்போது நடப்பதில்லை; அவன் மார்வில் தேனுண்ணும் வண்டுகள் அவனுக்கு அனுகூலமாகவே இருகின்றன; நடந்த கலவிக்கு அவை ஸாக்ஷி சொல்ல விரும்பவில்லை; ஆகையால் தோழியே! அடுத்தமுறை கலவியின்போது நீயும் என்னுடன் கலவிக்கு ஸாக்ஷியாக இருப்பாய்'' எனத் தோழியிடம் கூறும்படி இப்பாசுரம் அமைந்துள்ளது கருத்தில் கொள்ளத்தக்கது.

ஆழ்வார்களின் பாசுரத்தால் எம்பெருமானிடம் நம்பிக்கை ஏற்படுவது போல் மற்ற எந்த நூலாலும் நம்பிக்கை ஏற்படுத்த இயலாது. உலகவழக்கில் சில புராணக் கதைகள் மாறுபட்டு ப்ரசாரத்தில் இருப்பதின் உண்மையை உணரவும் ஆழ்வார்கள் அறிவுக்கண்ணைத் திறப்பதால் அவர்கள் திறத்து நாம் என்றென்றும் நன்றிக்கடன் பட்டவர்களேயாம்.

ஸ்ரீ:

# ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம் ②

## அதிகாரம் - 1 - ப்ரபந்தாவதாரம் - ஸ்ரீமத்ராமாயணம் அவதாரம்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

தன்னை அண்டியவர்களின் பயத்தைப் போக்குவதற்கு எம்பெருமான் ஸ்ரீராமன் எப்பொழுதும் ஸித்தமாகவே இருக்கிறான் என்று முதல் அதிகாரத்தின் பூர்வபாகத்தில் சில மங்கள ச்லோகங்கள் மூலமாக சக்ரவர்த்தித் திருமகனின் ஆச்ரித ரக்ஷகத்வத-ஸங்கல்பத்தை ஆசார்யன் ஸ்தாபித்தார். இனி உத்தர பாகத்தில் ஸ்ரீமத்ராமாயணத்தின் அவதாரம் மற்றும் அதன் மேன்மையைக் கொண்டாடுகிறார்.

**எம்பெருமானின் அவதார ரஹஸ்யம்**

முதலில் எம்பெருமானுடைய அவதாரங்கள் விஷயமாக சிலருக்கு இருக்கக்கூடிய கலக்கங்களுக்கு ஸமாதானங்களை சுருக்கமாகப் பார்ப்போம்.

*பரித்ராணாய ஸாதுநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் ।*
*தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥*
*[ஸ்ரீ பகவத்கீதை 4-8]*

‘‘ஸாதுக்களின் ரக்ஷணத்திற்க்காகவும், துஷ்டர்களின் நாசத்திற்க்காகவும், தர்மத்தை நிலைநிறுத்தும் பொருட்டும் அந்தந்த யுகத்தில் அவதாரம் செய்கின்றேன்’’ என்று கீதாசார்யன் தன்னுடைய அவதார ரஹஸ்யத்தை தானே வெளியிட்டான்.

மேலும், இந்த அவதார ரஹஸ்யம் விஷயமாக, ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் – தத்வத்ரய சிந்தனாதிகாரத்தில்:

1. அவதாரங்கள் எல்லாம் ஸத்யங்கள்.
2. இவற்றில் ஈச்வரனின் ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தித்வம் முதலிய திருக்கல்யாண குணங்களுக்கு ஸங்கோசம் துளியும் கிடையாது. அவற்றிற்கெல்லாம் ஸம்பூர்ண விகாஸமே உண்டு.
3. அவதாரதசையில் அவன் விக்ரஹங்கள் சுத்த ஸத்வங்களே.
4. பல விதமான அவதாரங்களுக்குக் காரணம் எம்பெருமானுடைய ஸங்கல்பம்தானேயன்றி கர்மா அன்று.
5. தர்மரக்ஷணம் பண்ண வேண்டிய காலமே அவதாரங்களுக்கு உரிய காலமாகும். அவதாரங்களின் ப்ரயோஜனம் ஸாதுக்களைக் காப்பதும், துஷ்டர்களை அழிப்பதும் மற்றும் தர்மத்தை நிலை நாட்டுவதேயாகும்.



என்று பலவிதமான ஸமாதானங்களைக் கொண்டு எல்லாவிதமான கலக்கங்களையும் நிரஸனம் பண்ணுகிறார்.

எம்பெருமான் ஸ்ரீராமனின் அவதாரம் எவ்வளவு பெருமைகளை உடையதோ அதற்கு ஸமானமான பெருமைகளைக் கொண்டது ஸ்ரீமத்ராமாயணத்தின் அவதாரம் என்று ஸ்வாமி தேசிகன் நிர்தாரணம் செய்தருள்கிறார். எப்படி?

**மஹர்ஷியின் ஸந்தேஹம்**

மஹர்ஷி வால்மீகி ப்ரஹ்மாவின் குமாரரான நாரதரிடத்தில் ஒரு கேள்வி கேட்கிறார்:

*கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கச்ச வீர்யவாந் ।*
*தர்மஜ்ஞ: ச க்ருதஜ்ஞ: ச ஸத்யவாக்யோ த்ருடவ்ரத: ॥*
*சாரித்ரேண ச கோ யுக்தஸ்ஸர்வபூதேஷு கோ ஹித: ।*
*வித்வாந் க: க: ஸமர்தச்ச கச்சைக ப்ரியதர்சந: ॥*
*ஆத்மவாந் கோ ஜிதக்ரோதோ த்யுதிமாந் கோநஸூயக:*
*பிப்யதி தேவாச்ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே ॥*
*[பால. கா. 1.2 - 1.4]*

இந்த லோகத்தில் இன்று யார் சிறந்த குணவாண்? எல்லையில்லா வீரத்தை உடையவர் யார்? தர்மத்தை நன்றாக அறிந்தவன் எவர்? நன்றியுணர்வு மறவாமலும், வாக்கில் ஸத்யமும், தனது வாக்குறுதிகளில் உறுதியும் கொண்டவர் யார்? நல்ல ஒழுக்கம் உடையவரும், அனைத்து உயிரினங்களின் நலனில் அக்கறை கொண்டவரும், எல்லா அறிவுகளிலும் தேர்ந்தவரும், பிறர் செய்ய முடியாத செயல்களைச் செய்ய வல்லவரும், தனித்துவமான அழகைக் கொண்டவரும் யார்? தன்னடக்கம் உடையவர் யார்? கோபத்தை வென்றவர் யார்? சிறந்த ப்ரஹ்ம தேஜஸ்ஸைக் கொண்டவரும், பொறாமையற்றவரும் யார்? யாருக்கு கோபம் வந்தால் தேவதைகள் கூட நடுங்குவர்?

இப்படிப்பட்ட பராக்ரமசாலியின் மாஹாத்ம்யத்தை தான் தெரிந்து கொள்ள ஆசைப்படுவதாக மஹர்ஷி விண்ணப்பிக்கிறார். அதற்கு நாரதர் ''முனிவரே! உங்களால் விளக்கப்பட்ட அந்த குணங்கள் உடைய மனிதர்கள் துர்லபர்கள். இருப்பினும் அத்தகைய குணங்களை உடைய ஒருவன் பற்றி நான் நன்கு அறிந்து உங்களுக்குச் சொல்கிறேன், கேளுங்கள்.'' என்று சொல்லி ஸங்க்ஷேப ராமாயணத்தைப் பூர்த்தியாக உபதேசம் பண்ணினார்.

**முதல் ச்லோகாவதாரம்**

பின்னொருநாள், வால்மீகி முனிவர் கங்கை நதிக்கரை வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அப்போது பறவைகள் சப்திக்கும் இனிய கீச்சென்ற ஒலி அவருக்குக் கேட்டது. அந்த ஒலியை நோக்கிச் சென்ற அவர், அங்கே ஒரு ஜோடி க்ரௌஞ்ச பக்ஷி இணைந்து இருந்ததைப் பார்த்தார். அந்தக் காட்சி மிகவும் ரம்யமானதாக இருந்தது. வால்மீகி முனிவர் மனமகிழ்ந்து, அங்கே நின்றபடி அவற்றைக் கவனித்தார். அந்த ஆண்–பெண் பறவைகள் ஒருவரில் ஒருவர் முழுமையாக மூழ்கி இருந்தன. திடீரென்று வலி நிறைந்த ஒரு கூக்குரல் கேட்டது. உடனே ஆண் பறவை தரையில் விழுந்தது. அதன் மார்பிலிருந்து செந்நிற இரத்தம் பெருகியது. அது ஒரு வேட்டைக்காரன் எய்த அம்பால் தாக்கப்பட்டதை வால்மீகி உணர்ந்தார். வேட்டைக்காரன் அம்பை எய்தி, இறந்த பறவையை எடுக்க அங்கே வந்தான்.

இதைக் கண்டு வால்மீகி மிகுந்த துயரமும் கோபமும் அடைந்தார். அவர் அந்த வேட்டைக்காரனை நோக்கிக் கூறினார்:

*மா நிஷாத ! ப்ரதிஷ்டாம் த்வமகமச்சாச்வதி: ஸமா: ।*
*யத்க்ரௌஞ்சமிதுநாதேகமவதீ: காமமோஹிதம் ।।*

''ஹே வேடுவனே! ஒரு உத்தமமான ஸ்தானத்தை நீ அடையப்போவதில்லை. பெண் பக்ஷியோடு சேர்ந்திருக்கும் நிலையில், தன்னையும் மறந்திருந்த நேரத்தில், அந்த ஆண் பக்ஷியை கொன்றாயே. எவ்வளவு காலம் ஆனாலும் நீ நற்கதியை அடையமாட்டாய்'' என்று வேடனை நிந்திக்கிறார்.

இதுதான் வால்மீகியின் திருவாக்கிலிருந்து உதித்த முதல் ச்லோகம். இதை நம் ஆசார்யவள்ளல் **''சோக: ச்லோகத்வமப்யாகத இதி வதத:''** (வால்மீகியின் சோகமே ச்லோகமாக வெளிப்பட்டது) என்று அத்புதமாக ஸாதிக்கிறார்.


இதுவே ராமாயணத்தின் மங்கள ச்லோகம் என்று பெரியோர்களால் போற்றப்படுகிறது. எப்படியென்னில்:

மா – மஹாலக்ஷ்மீ; நிஷாத: – நிவாஸ:; மாநிஷாத என்றால் ஸ்ரீநிவாஸ என்று பொருள். அவனே, காமத்தால் மோஹித்துக் கிடக்கும் ராவண, ஸூர்பநகாதிகளை வதம் செய்து மூன்று லோகங்களையும் ரக்ஷித்தவன். ஆதலால் எல்லாக்காலங்களிலும் அவன் விஜயத்தோடு இருக்க வேண்டும், என்று அர்த்தம் கொள்ள வேண்டும்.

**ப்ரஹ்மா கூறிய உண்மை**

இந்த ச்லோகம் எப்படி தன் வாக்கிலிருந்து வெளிப்பட்டது என்ற சிந்தனையிலேயே இருந்த வால்மீகியைப் பார்க்க சதுர்முக ப்ரஹ்மா அவர் ஆச்ரமத்திற்கே எழுந்தருளினார். முனிவரின் க்லேசத்தை அறிந்த ப்ரஹ்மா

**மச்சந்தாதேவ தே ப்ரஹ்மந் ப்ரவ்ருத்தேயம் ஸரஸ்வதீ** (பால. கா. 2-31) ''மாமுநியே! இந்த ச்லோக ரூபமான ஸரஸ்வதீ என்னுடைய ஸங்கல்பத்தினாலேயே உன்னிடமிருந்து வெளியாயிற்று. இதற்குக் காரணம் ராமனுடைய திவ்ய சரித்ரம் முழுவதையும் எல்லோரும்





அறிந்துகொள்ளும்படியாக, ச்லோக ரூபமாக, தேவரீர் மூலமாக எழுதப்படவேண்டும் என்பதே'' என்று நியமித்தருளினார்.

இதைக்கேட்ட முனிவரோ, ஸ்ரீராமனுடைய சரித்ரத்தில் ஸதஸ்யமான வ்ருத்தாந்தங்களை எழுதமுடிந்தாலும், தாமறியாத ரஹஸ்யமான விஷயங்களை எப்படி எழுதுவது என்று வினவினார். அதற்கு ப்ரஹ்மன்:

*ரஹஸ்யம் ச ப்ரகாசம் ச யத் வ்ருத்தம் தஸ்ய தீமத: ।।*
*ராமஸ்ய ஸஹஸௌமித்ரே ராக்ஷஸாநாம் ச ஸர்வச: ।*
*வைதேஹ்யாச்சாபி யத் வ்ருத்தம் ப்ரகாசம் யதி வா ரஹ: ।।*
*தச்சாப்ய விதிதம் ஸர்வம் விதிதம் தே பவிஷ்யதி ।*
*ந தே வாகந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி ।।*
*[பால. கா. 2-33-35]*

''புத்திமானான ராமனுடையவும், லக்ஷ்மணனுடையவும், ராக்ஷஸர்களுடையவும், ஸீதையினுடையவும் ரஹஸ்யமாகவும், ப்ரகாசமாகவுமுள்ள வ்ருத்தாந்தங்களெல்லாம் உனக்குத் தெரியவரும். நாரதர் மூலமாக நீ அறிந்துகொள்ளாத அனைத்தும் கூட உனக்கு முற்றும் தெரியப்போகின்றன. நீ செய்யப்போகிற ஸ்ரீராமன் விஷயமான இந்த காவ்யத்தில் உன்னுடைய வார்த்தை ஒரு ஸமயத்திலும் ஒன்றும் கூட பொய்யாக்கமாட்டாது.'' என்ற வரத்தை தந்தருளினார்.

**ஸ்ரீமத்ராமாயண அவதாரம்**

இப்படி ப்ரஹ்மாவின் அநுக்ரஹத்தைப் பெற்ற வால்மீகி

*ஹஸிதம் பாஷிதம் சைவ கதிர்யாவச்ச சேஷ்டிதம் ।*
*தத் ஸர்வம் தர்மவீர்யேண யதாவத் ஸம்ப்ரபஷ்யதி ।।*
*[பால. கா. 3-4]*

ஸ்ரீராமன் முதலானோர் சிரித்ததும், மொழிந்ததும், நடந்ததும் மற்றும் செய்த செயல்கள் எவை எவையுண்டோ அவை எல்லாவற்றையும் ப்ரஹ்மாவின் வரப்ரஸாதத்தால் வால்மீகி உள்ளது உள்ளபடி நன்றாக அறிந்து ''ஆதிகாவ்யம்'' என்று கொண்டாடப்பெறும் ஸ்ரீமத்ராமாயண காவ்யத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல அருளிச்செய்து ''ஆதிகவி'' என்னும் பெரும்பேற்றைப் பெற்றார்.

**தர்ம-வீர்ய-ப்ரஸூதமான திவ்ய சக்ஷுஸ் -** மஹர்ஷிசெய்த தபஸ்ஸின் மாஹாத்ம்யத்தால் ஏற்பட்ட திவ்யத்ருடி என்று ஸ்வாமி தேசிகன் மூலத்தில் காட்டுவது இங்கு ரஸிக்கத்தக்கது.

நம் ஆசார்ய ஸார்வபௌமன் விஷயத்திலும் ஒரு ஐதிஹ்யம் நம் பெரியோர்களால் காட்டப்படுகிறது. எப்படி ப்ரஹ்மாவின் அருளால் வால்மீகி ராமசரித்ரத்தை ஸாக்ஷாத்கரித்தாரோ, அதேபோல அந்த திவ்யதம்பதிகளின் அருளால் ஸ்வாமி தேசிகனுக்கும் சக்ரவர்த்தித் திருமகன் சரிதையும் ஆயர்பாடியில் கண்ணன் செய்த லீலைகளும் மாநஸீக ப்ரத்யக்ஷமாக வெளிப்பட்டு, அந்த திவ்யாநுபவத்தின் பரீவாஹமாக **ஸ்ரீ மஹாவீர வைபவம்** மற்றும் **ஸ்ரீ கோபால விம்சதி** என்கிற க்ரந்தங்களை அருளிச்செய்தார் என்பது நம் பூர்வாசார்யர்களின் கூற்று.

**ஸ்ரீமத்ராமாயணத்தின் மேன்மை**

சரி, இப்படி ராமனின் சரிதத்தை அறிந்து கொள்வதால் யாருக்கு என்ன லாபம்?

*தசேந்த்ரியாநநம் கோரம் யோ மநோரஜநீசரம் ।*
*விவேகசரஜாலேன சமம் நயதி யோகிநாம் ।।*

கர்ம-ஜ்ஞான இந்த்ரியங்கள் என்று பத்து தலைகளை உடைய கொடிய ராக்ஷஸனான மனஸ்ஸை எவன் விவேகம் என்கிற அம்புக்கூட்டங்களால் அடக்குகிறானோ அவனே விவேகி. அப்படிப்பட்ட விவேகிகள் அற்பமான விஷய ஸுகங்களில் பற்று சிறிதும் இல்லாமல், மோக்ஷப்ராப்தி ஒன்றிலேயே ஊற்றை உடையவர்களாக இருப்பார்கள். லோகத்தில் இருப்பவர்கள் அனைவரும் இப்படிப்பட்ட விவேகத்தைப் பெற்று வீடு பெற வேண்டும் என்று திருவுள்ளம் பற்றிய ப்ரஹ்மா, சரணாகதி தர்மத்தை அறிவிக்கின்ற இந்த அவதார ரஹஸ்யத்தை மஹர்ஷியின் வாக்குமூலமாக வெளியிட்டார்.

மேலும், வேதத்தின் உண்மைப்பொருளை நாம் அறியவேண்டும் என்பது சாஸ்த்ர விதி. ஆனால் வேதார்த்தங்களைத் தவறாகப் புரிந்துகொண்டு அதற்கு மனம் போன போக்கில் அர்த்தம் போதிப்பவர்களே அதிகம். இவர்களைக் கண்டு வேத மாதாவே பயப்படுகிறாள் **(பிபேத்யல்பச்ருதாத் வேத:).** அவ்வச்சத்தைப் போக்குவதாகவும், பொய்யான அர்த்தங்களை புறந்தள்ளுவதாகவும், இருப்பது இந்த காவ்யம்.

இவ்வாறு,

- பரம புருஷார்த்தமான சரணாகதியை ஸ்பஷ்டமாக போதித்தும்,
- பாராயணம் பண்ணுபவர்களுக்கு ஹிதத்தை அளித்தும்,
- வேதக்கருத்துக்களை உள்ளது உள்ளபடி அறிவித்தும்
- லாகத்தை உஜ்ஜீவிப்பதற்க்காகவே ஏற்பட்ட க்ரந்தம் ஸ்ரீமத்ராமாயணம்.

**நாலு வேதங்களும் ஒரு தட்டிலும் தானொரு தட்டிலுமாக நிற்கிற ஸ்ரீ ராமாயணம்** என்றருளி, ஆதிகாவ்யத்தின் மேன்மைமையைக் கொண்டாடி, முதலாவதான ப்ரபந்தாவதார அதிகாரத்தைத் தலைக்கட்டுகிறார் ஸ்வாமி தேசிகன்.

ஸ்ரீ:

# உத்திரத்தில் உதித்த உன்னத அருள்

ஸ்ரீமதி அனுராதா சேஷாத்ரி, பெங்களூரு

*பிராட்டியின் தோற்றமும் ஏற்றமும்*
*ஸ்கலித கடகமால்யைர் தோர்பிரப்திம் முராரே:*
*பகவதி ததிமாதம் மத்நத: ச்ராந்திசாந்த்யை|*
*ப்ரமதம்ருத தரங்காவர்தத: ப்ராதுராஸீ:*
*ஸ்மித நயனஸுதாபிஸ் ஸிஞ்சதீ சந்த்ரிகேவ||*
(ஸ்ரீ குணரத்ன கோசம் - 49)

எம்பெருமான் திருப்பாற்கடலைக் கடைந்தபோது, தனது திருத்தோள்களாலும் திருக்கரங்களாலும் தயிரைக் கடைவது போன்று கடைந்தான். அப்போது அவன் திருக்கரங்களில் அணிந்திருந்த ஆபரணங்கள் நழுவின. அவனது மாலைகளும் சிதறின. இவ்வாறு கடைந்து களைப்புற்றிருந்த எம்பெருமானின் நிலையை கண்ட பெரிய பிராட்டி, அவனிடமுள்ள பரிவு மிகுதியால் அவன் சோர்வு நீங்கும்படி எழில் வீசும் புன்முறுவலுடனும் கனிவான திருப்பார்வையுடனும் தோன்றினாள். அமுதினிடையே தோன்றிய பேரமுதாய், ஒரு **பங்குனி உத்திர நன்னாளில்** பெரிய பிராட்டி அவதரித்தாள்.

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்கு **ச்ரிய:பதி** என்கிற அசாதாரண திருநாமம் உண்டு. பிராட்டியின் திருநாமமோ பெருமை பொருந்திய 'ஸ்ரீ' என்ற சொல்லாகும். 'ஸ்ரீ' என்ற பதத்திற்கே மஹாலக்ஷ்மி என்று பொருள். எம்பெருமான் ஜகத்துக்கு சேஷியாக இருப்பதைப் போன்றே பிராட்டியும் சேஷியாகின்றாள். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் **பெரிய பிராட்டியார்** என்பது ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயாரைக் குறிக்கும். பரமாத்மாவான எம்பெருமானுடன் **நித்ய அநபாயிநி** — எப்போதும் பிரியாதவள் — என்று திகழ்பவள். அவள் எம்பெருமானின் இன்துணைவி மட்டுமல்ல. **புருஷகார பூதையாக** ஜீவர்கள்மேல் கருணை கொண்டு, அவர்களை பரமாத்மாவை அடையச் செய்பவள். இப்பிராட்டியின் பெருமையை ஆழ்வார்கள் மட்டுமல்லாது பின்னர் வந்த ஆசார்யர்களும் மிகுந்த உன்னதத்துடன் விளக்கியுள்ளனர். குறிப்பாக, **ஸ்வாமி ஆளவந்தார், ஸ்வாமி ராமானுஜர், ஸ்வாமி தேசிகன், பராசர பட்டர்** ஆகியோர் தங்கள் அருளிச்செய்த க்ரந்தங்களில் பிராட்டியின் மகிமையை அற்புதமாக விவரித்துள்ளனர்.

**பிராட்டியின் ஸ்வரூபம்**

ஆளவந்தார் தாம் அருளிச்செய்த சது:ச்லோகியில், **காந்தஸ்தே புருஷோத்தம: பணிபதி: சய்யாஸனம் வாஹநம்...** என்கிற ச்லோகத்தில், 'பகவானுக்குரிய **ஜ்ஞானம், பலம், ஐச்வர்யம், சக்தி, வீர்யம், தேஜஸ்** என்ற ஆறுகுணங்களும் இயற்கையாகவே உன்னிடமும் இருப்பதால் நீ 'பகவதி' என்று சொல்லப்படுகிறாய். உன்னுடைய பர்த்தாவானவன் புருஷர்களில் சிறந்த நாராயணன். ஸர்ப்பங்களில் உயர்ந்த **ஆதிசேஷன்** அவனுக்கு படுக்கையும் ஆசனமும் ஆகின்றான். வேத ஸ்வரூபியான கருடன் அவனது வாஹனம். உலகத்தை மயக்கும் **பிரக்ருதி** எனப்படும் மாயையே உன்னை உணர முடியாதபடி திரையாக நிற்கிறது.



தேவர்கள், தேவிமார்கள் அனைவரும் உனக்கு கைங்கர்யம் செய்பவர்கள். மேலும் பெருமையைக் குறிக்க எங்கும் சேர்க்கப்படும் 'ஸ்ரீ' என்ற சொல்லே உனக்குத் திருநாமமாக அமைந்துள்ளது. இவ்வளவு உயர்ந்தவளாகிய உன்னை நாம் எவ்வாறு முழுமையாகப் புகழ்வது?' என்று ஆளவந்தார் பெரிய பிராட்டியின் மேன்மையையும் ஸ்வரூபத்தையும் அருளிச் செய்கிறார்.

*ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத இதம் சந்த்ரவதனே*
*த்வதாச்லேஷோத் கர்ஷாத் பவதி கலு நிஷ்கர்ஷ ஸமயே|*
*த்வமாஸீர்மாத: ஸ்ரீ கமிதுரிதமித்தம் த்வ விபவ:*
*ததந்தர்பாவாத் த்வாம் ந ப்ருதகபிதத்தே ச்ருதிரபி ||*
*[ஸ்ரீ குணரத்ன கோசம் - 28]*

இங்கு பராசர பட்டர் ஒரு உயர்ந்த தத்வத்தை வெளிப்படுத்துகிறார். எம்பெருமானை அறியவும் புரிந்துகொள்ளவும் பிராட்டியைத் தழுவியே அறிய வேண்டும் என்பதே அது. எம்பெருமானுக்குத் தனிப்பட்ட அடையாளமாகவும், அவனுள் அவள் அடங்கியிருப்பதாலும், வேதம் தனியாகப் பிராட்டியைப் பற்றி ஓதவில்லை போலும் என்று பட்டர் அருளுகிறார். எம்பெருமானின் ஸ்வரூபம் எப்படியென்கிறதை உணர்த்துபவளே பிராட்டி. அவளே எம்பெருமானின் **ஸ்வரூப நிரூபக தர்மம்** என்று அவர் விளக்குகிறார். எம்பெருமானைச் சொன்ன இடமெல்லாம் பிராட்டியையும் சொல்லிற்றாம் என்று எம்பெருமானார் அருளிச்செய்ததை இங்கு நினைவு கொள்ள வேண்டும்.

**சரணாகதி தத்வத்தில் பிராட்டியின் நிலை**

சரணாகதி தத்வத்தில் பிராட்டியின் நிலை மிக உயர்ந்தது. ப்ரபந்ந ஸந்தான கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார், **ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப, கண்டசதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன் உன் திருவடியை** என்பதாக பெரிய பிராட்டியாரும் நீயுமாகச் சேர்ந்து என்னை அபிமானித்து அடிமை செய்ய வழி காட்டிய விதத்தைக் கண்டு கொண்டு உன் திருவடிகளை அடையும் பாக்யம் பெற்றேன் என்று பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு பகவானிடம் ப்ரபத்தி செய்வது ஸ்ரீ வைஷ்ணவ தர்மம் என்பதனை நிலை நாட்டியவர். மற்ற ஆழ்வார்களும் ஆசார்யர்களும் இந்த மார்க்கத்தையே பின் பற்றி உயர்ந்தனர்.

ஜகதாசார்யரான ஸ்வாமி ராமானுஜர், ஸ்ரீரங்கத்தில் பங்குனி உத்திர நாளில் நம்பெருமான் பிராட்டியுடன் ஏக ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளிய போது, **பகவன் நாராயண அபிமதாநுரூப அநந்ய சரணம் சரணம் அஹம் ப்ரபத்யே என்று கத்யத்ரயம்** விண்ணப்பித்து, முதலில் பிராட்டியையே சரணடைந்தார். இதன் மூலம் நமக்கு வழிகாட்டியதோடு தாயாரின் மஹத்வத்தையும் உலகிற்கு உணர்த்தினார்.

மேலும் லக்ஷ்மீ தந்த்ரத்தில் **ப்ராயச்சித்த ப்ரஸங்கேது ஸர்வ பாப ஸ்முத்பவேமாமேகாம் தேவ தேவஸ்ய மஹிஷீம் சரணம் ச்ரயேத்** என்று பிராட்டி தன் திருவாக்கால் அருளிச்செய்தபடி முதலில் பிராட்டியின் திருவடிகளில் சரணம் புகுந்து, பின்னர் எம்பெருமானின் திருவடிகளில் சரணம் புகுகின்றார் ஸ்வாமி ராமனுஜர்.ஆகவே **சரணாகதி என்ற உபாயத்தில் முதலிடம் வகிப்பவள் பெரிய பிராட்டியே.**

லக்ஷ்மீ தந்த்ரத்தில் **லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேச:** என்று கூறப்பட்டபடி, எம்பெருமான் பிராட்டியுடன் சேர்ந்தே ஜீவர்களை ரக்ஷிக்கின்றான். அவளின் துணை கொண்டுதான் எம்பெருமான் ரக்ஷிக்கின்றான் என்று அனைத்து ஸித்தாந்தங்களும் வேதாந்தங்களும் கூறுகின்றன. **ஆச்ரயண வேளையோடு போக வேளையோடு வாசியற ஒரு மிதுனமே உத்தேச்யம்** என்று நமக்கு உபாயமாகவும் உபேயமாகவும் இருப்பது அந்த திவ்யதம்பதியே என்று ஸ்வாமி நம்பிள்ளை அருளிச்செய்துள்ளார்.

ஸ்வாமி நம்மாழ்வாரும் **அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா** என்று உபாய தசையிலும் பல தசையிலும் பிராட்டி எம்பெருமானைப் பிரியாது உபாயமாகவும் பலனாகவும் திகழ்கின்றாள் என்று காட்டியருளுகிறார். இப்படி இவள் அகலகில்லாது எம்பெருமானுடன் இணைந்து நிற்கும் காரணத்தை நம் ஸ்வாமி தேசிகன் மிக அழகாக ஸாதிக்கின்றார். **தன்னடி சேர்ந்த தமர் உனையணுக நின்னுடன் சேர்ந்து நிற்கும் நின் திருவே** என்று அடியவர்களின் குற்றங்களை கணிசியாமல் அவர்கள் எம்பெருமானை அடையும்படி செய்கிறாள். இதற்காகவே அவனை கணமும் பிரியாது அவனுடன் இணைந்து நிற்கிறாள் என்கிறார்.

**பிராட்டியின் ஆகாரம்**

எம்பெருமானுடைய **ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம்** ஆகிய ஜகத் வியாபாரங்களிலும் பிராட்டி அவனுடன் இணைந்து நிற்கின்றாள். அதோடு ஜீவர்களுக்கு தனிப்பட்ட முறையிலும் உதவுகிறாள். ஜீவர்கள் சாஸ்த்ரத்தை மீறி நடந்ததால் எம்பெருமான் அவர்களை ஸம்ஸாரத்தில் மீண்டும் மீண்டும் உழலச் செய்கிறான். ஆனால் பிராட்டியோ **கருணையே வடிவானவள்.**

நிக்ரஹம் அறியாதவள். எம்பெருமானிடத்தில் வால்லப்யம் கொண்டிருந்தாலும், ஜீவர்களிடத்தில் வாத்ஸல்யம் கொண்டவளாக இருப்பதால் அவர்களுக்காக எம்பெருமானிடம் பரிந்து பேசுகிறாள். இதனால் இருவரில் **பிராட்டிக்கே ஒரு ஏற்றம்** உண்டு என்று ஆசார்யர்கள் கூறுகின்றனர். ஏனெனில் எம்பெருமானுக்கு உபாயம், உபேயம் இரண்டு கார்யங்கள் இருக்கும்போது, பிராட்டிக்கோ உபாயம், உபேயம், புருஷகாரம் என்று **மூன்று ஆகாரங்கள்** உள்ளன என்று கூறப்படுகிறது.

**பிராட்டியின் ப்ரபாவம்**

எம்பெருமானுக்கு உண்டான மங்களங்களெல்லாம் பிராட்டியின் ஸம்பந்தத்தாலேயே வெளிப்படுகின்றன என்று ஸ்ரீ பராசரபட்டர் ஸ்ரீ குணரத்ன கோசத்தில் உரைக்கிறார்.

அவள் இயற்கையாகவே எம்பெருமானுக்கு உடைமையாக இருப்பவள். பிராட்டியின் ஸம்பந்தத் தாலே எம்பெருமான் எல்லாப் பெருமைகளையும் அடைகின்றவனாகத் தோன்றினாலும், அதனால் அவனுக்கு எந்தவித குறையும் உண்டாகாது என்று பட்டர் தெளிவுபடுத்துகிறார்.

## பங்குனியில் முக்கிய உத்ஸவங்கள்

| உத்ஸவம் | நாள் |
|---|---|
| **மஹா ஸம்ப்ரோக்ஷணம்** | மார்ச் 16 (திங்கள்) |
| **யுகாதி உத்ஸவம்** | மார்ச் 19 (வியாழன்) |
| **ராமர் உத்ஸவம் (10 நாட்கள்)** | மார்ச் 19 (வியாழன்) முதல் 27 (வெள்ளி) வரை |
| **ஸ்ரீராமநவமி** | மார்ச் 27 (வெள்ளி) |
| **ராமர் பட்டாபிஷேகம்** | மார்ச் 28 (சனி) |
| **பங்குனி உத்திரம்** | ஏப்ரல் 1 (புதன்) |
| **ஊர்கோல உத்ஸவம்** | ஏப்ரல் 2 (வியாழன்) |
| **பல்லவ உத்ஸவம் (3 நாட்கள்)** | ஏப்ரல் 10 (வெள்ளி) முதல் 12 (ஞாயிறு) வரை |
| **ஸ்ரீ பாஷ்யகாரர் உத்ஸவம் (10 நாட்கள்)** | ஏப்ரல் 13 (திங்கள்) முதல் |
| **சித்திரை வருஷப்பிறப்பு** | ஏப்ரல் 14 (செவ்வாய்) |

அப்படியானால், ‘எம்பெருமானை விட பிராட்டி உயர்ந்தவளா? அவளுடைய தொடர்பால் எம்பெருமானுக்கு பெருமை உண்டாகிறது என்றால், அவனுடைய மேன்மைக்குக் குறை வராதா?’ என்ற கேள்விக்கும் பட்டர் பதிலளிக்கிறார்.

*ஸ்வத: ஶ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி தத ஏவைச பகவான்*
*த்வதாயத்தர்தித்வே[அ]ப்யபவத பராதீந விபவ:|*
*ஸ்வயா தீப்த்யா ரத்னம் பவதபி மஹார்கம் ந விகுணம்*
*ந குண்ட ஸ்வாதந்த்ர்யம் பவதி ந சாங்யாஹித குணம்||*
*[ஸ்ரீ குணரத்ன கோசம் - 31]*

இதே உண்மையை ஆழ்வார்களும் தங்கள் அனுபவத்தில் வெளிப்படுத்துகின்றனர். எம்பெருமானின் திருமார்பை அலங்கரிப்பதால் பெருமாளுக்கு ஓர் ஏற்றம் என ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். எம்பெருமானின் திருமார்பு பிரகாசிப்பதற்குக் காரணம் பிராட்டி அதில் உறைவதாலே என்று அருளிச் செய்கிறார்.

*திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும்*
*திகழ்கின்ற திருமாலார் சேர்விடம் தண் வாட்டாறு...*
(திருவாய்மொழி 10-6-9)

எம்பெருமானின் திருமார்பு ‘திகழ்கின்றது’ என்று ஆழ்வார் கூறுகிறார். அந்தப் பிரகாசம் எவ்விதம் வந்தது? பிராட்டி அந்த திருமார்பில் நித்யமாக உறைவதால் தான் அது இவ்வாறு ஒளிர்கிறது என்பது ஆழ்வாரின் அனுபவம்.

**முடிவுரை**

பெரிய பிராட்டியாரின் பெருமை அளவிட முடியாதது. எம்பெருமானுடன் நித்யமாக இணைந்து, உலகின் எல்லா ஜீவர்களிடமும் அளவற்ற கருணை கொண்டு அவர்களை வானேற போமளவும் வழி காட்டும் தாயானவள் அவள். எம்பெருமான் நியாயத்தை நிலை நிறுத்துகின்றவராயின், பிராட்டி கருணையை வெளிப்படுத்துகின்றவள். இந்த இரு தத்வங்களும் சேர்ந்து தான் ஜீவர்களுக்கு ரக்ஷை உண்டாகிறது.

ஆகவே ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில், ஜீவர்கள் எம்பெருமானை அடைவதற்கான வழியாக பிராட்டியின் புருஷகாரம் மிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. அவள் கருணை வடிவமாக இருந்து, எம்பெருமானிடத்தில் நமக்காகப் பரிந்து பேசும் தாயாக விளங்குகின்றாள். அதனால் தான் ஆசார்யர்கள் அனைவரும் **ஸ்ரீமந்நாராயணன்** என்று, பிராட்டியுடன் சேர்த்தே எம்பெருமானை குறிப்பிட்டுள்ளனர். **பாவா ரூடௌ பகவதியுவாம் தம்பதீ தைவதம் ந:** என்று திவ்யதம்பதிகளைக் காட்டிலும் நமக்கு பேரருள் புரிகிற தைவம் வேறில்லை என்பது ஸ்வாமி தேசிகனின் கூற்று.

இவ்விதம் ஆழ்வார், ஆசார்யர்கள் காட்டிய வழியை நாமும் பின் பற்றினோமானால் கருத்தொருமித்த இத்திவ்யதம்பதிகளின் கரை புரண்டோடும் க்ருபைக்கு பாத்ரமாவது திண்ணம் என்பது பூர்வாசார்யர்களின் திருவுள்ளம் ஆகும்.

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (36)

## Swami Desika's Decad On Surrender Unto Lord Arulaala


**Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore**

Swami Desika, the principal torchbearer of the Visishtaadvaita philosophy founded by Bhagavath Ramanuja, has authored several treatises and hymns highlighting the vitality of the Doctrine of Surrender. The most familiar among them are the Sanskrit hymn Nyasa Dasakam and Tamil Prabandham Adikkala-Paththu — both on Lord Varadaraja.

The latter is especially relevant now as Anadhyayanam has recently begun. Adikkala-Paththu enjoys the pride of place among the Desika Prabandhams just as Pallaandu among the Divya Prabandham in the sense that they are the respective leads. So, during the period of Anadhyayanam when the Divya Prabandham is not recited, the Desika Prabandham recitation invariably begins with Adikkala-Paththu.

It may be noted that in five (1, 2, 7, 8 & 11) of the 11 Paasurams therein, Swami Desika refers to Lord Varadaraja as 'Arulaala' which is a rough translation of the name. The other references are Arul Varadar (6





& 10), Sindhura Verpu Iraiyavanaar (3), Naagamalai Naayakanaar (4), Madhil Kachchi Nagar Karunai Nathan (5) and Paraman (9).

Let us now take a look at the meaning of the verses:

**1. பத்தி முதலாம் அவற்றில்...**

Unable to attain the Lord through Bhakthi Yoga, I came rushing to ThirukKachchi, the principal city among the Sacred Seven, to surrender unto Lord Arulaala of Hasthigiri, much like the tired Kakasura did after crisscrossing all directions.

**2. சடைமுடியன் சதுர்முகன் என்று...**

Having seen that the goodness of those like Siva and Brahma vanish owing to their Karma, I attained the twin feet of Lord Arulaala of Hastghigiri who is inseparable from the fragrant-lotus dame, and whose abode is ThirukKachchi.

**3. தந்திரங்கள் வேறின்றி...**

The Lord of Hasthigiri bestows his blessing on all those who attain His feet having distinguished between Bhakthi Yoga and Prapaththi Yoga and pursued the latter without taking recourse to other means, faithfully follow the directives of the Saasthras, worship Him with the Veda manthras and other scriptures of Acharyas. I know none other than His great qualities.

**4. காகம் இராக்கதன் மன்னர்...**

I attained the great feet of the Lord of Hasthigiri with the knowledge that He fittingly granted

worldly pleasure and Moksha, as the case may be, to Kakasura, Vibheeshana, Draupadhi, Kshathrbandhu, Gajendra, Siva, Brahma, the Devas, et al.

**5. உகக்கும் அவை உகந்து...**

With no refuge in the world and no means to adopt, I surrendered unto the Lord of ThirukKachchi by practicing the five limbs of Prapaththi, which are: Doing what would please Him (Aanukoolya Sankalpam); Not doing what would displease Him (Praathikoolya Varjanam); Placing unswerving faith in His grace (Maha Viswaasam); Realising my incapacity to do anything without his grace (Kaarpanyam); Explicitly seeking the Lord's mercy in granting Moksha (Gopthruthva Varanam).

**6. அளவுடையார் அடைந்தார்க்கும்...**

I attained the twin feet of the majestic Lord Arulaala who guarantees Moksha by showing His Abhaya Hastham (implying fear not) to anyone who uttered even once that 'I attain Your feet' and grants all His wealth and even Himself to that Prapanna.

**7. உமதடிகள் அடைகின்றேன் என்று...**

I placed myself at the disposal of the fragrant-Thulasi Lord Varada, who is the saviour of all those who attained Him (a) with clear knowledge of Prapaththi (Sva Nishtai); (b) by chanting the procedure of Prapaththi (Ukthi Nishtai); (c) going by the grace of the Acharya (Acharya Nishtai); (d) being part of the Prapaththi performed by noble Bhagavathas (Bhagavatha Nishtai).

**8. திண்மை குறையாமைக்கும்...**

I will not forget the words (Charama Sloka, etc.) of the great Lord Arulaala in order that I never lose faith in Him, am always full of knowledge and devotion, do not lose track of the truth and relish in that, do not lose the sense of helplessness, hold the breath till the time of Moksha and stay relieved of the distress of Samsara.

**9. சுருதி நினைவு இவையறியும்...**

I surrendered unto the feet of the Lord who has Soorya and Chandra as His eyes through the strength of the words of the Azhwars who mastered the Vedas and Sasthras, the great works of illustrious Acharyas like Sri Bhasyakara and the clear knowledge obtained from those great works overcoming ignorance.

**10. திருமகளும் திருவடிவும்...**

I firmly entrenched myself at the solid feet of Lord Varada who has His Consort alongside, has divine form, bestows great grace, is personification of knowledge, is easy to access for devotees, offers immeasurable protection and indulges in the act of creation, protection and destruction.

**11. ஆறுபயன் வேறில்லா...**

These 10 Paasurams composed on the twin feet of Lord Arulaala are blemishless. These are noble verses, for the benefit of those devotees who have no means and refuge other than Him, on the doctrine of Prapaththi and its fruits and the procedures involved therein.

*(to be Continued...)*


**ஆஸ்திகர்கள் கவனத்திற்கு**

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான
கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன்,
நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:
**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

நிர்வாகம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.



திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம்









குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம்





